**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4032, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2024

ஆண்டு: 9 திகதி: 22-06-2024

நேரம்: 2 ½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திரு சரவணமுத்து தேவராசா

மாணவர் பெயர்:______________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 15 | |
| வினா 2 | 15 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

வகுப்பு 9:

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

| வினா இல | 1 | புள்ளிகள் | 15 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

பின்வரும் சொற்களை பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக. 15 புள்ளிகள்

1. தமிழ் மொழி

_______________________________________________

_______________________________________________

2. மகிழ்ச்சி

_______________________________________________

_______________________________________________

3. மலர்கள்

_______________________________________________

_______________________________________________

4. சூரியன்

_______________________________________________

_______________________________________________

5. பெற்றோர்

_______________________________________________

_______________________________________________

6. ஆசிரியர்கள்

_______________________________________________

_______________________________________________

7. நடனம்

8. கலைவிழா

9. ஓடினார்கள்

10. படிக்கிறேன்

11. விளையாடுவாள்

12. நடித்தீர்கள்

13. பாய்ந்தது

14. ஏறினேன்

__________________________________________________________________

__________________________________________________________________

15. அழுதான்

__________________________________________________________________

__________________________________________________________________

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **2** | **புள்ளிகள்** | **15** | **பக்கம்** | **5** |

அறிவியலின் கண்டுபிடிப்புகளினால் உலகம் மாற்றத்தையும், முன்னேற்றத்தையும் பெற்று வருகின்றது. ஆனால் அதே அறிவியலின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பயங்கரமான ஆயுதங்களினால் உலகத்தில் அச்சமான சூழ்நிலையும் நிலவுகின்றது. உலகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு மக்களும் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தினால், உலகத்தில் உள்ள எல்லா நாடுகளும் ஒன்றோடொன்று நட்பாக இருந்தால், உலகத்தில் சண்டைகள் இல்லாத சாந்தி, சமாதானம் நிலைக்கின்ற சமுதாயம் உருவாகும். ஆனால் உண்மையான நிலைமை அப்படி இல்லை. அதற்கு எதிர்மாறான நிலைமையே காணப்படுகின்றது. அமெரிக்கா பிரித்தானியா, பிரான்ஸ், ரஷியா, சீனா ஆகிய வல்லரசு நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு பேரழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றன. அத்துடன் அந்த ஆயுதங்களை பல நாடுகளுக்கு விற்பனை செய்கின்றன. வல்லரசு நாடுகளைப் பின்பற்றி உலகில் உள்ள பல நாடுகள் ஆயுத உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபடுகின்றன.

1914 ஆண்டிலிருந்து 1918 ஆம் ஆண்டு வரை முதலாம் உலக மகா யுத்தம் நடைபெற்றது. இரண்டாம் உலக மகா யுத்தம் 1919 ஆம் ஆண்டிலிருந்து 1945 ஆண்டு வரை நடைபெற்றது. ஆனால் மூன்றாம் உலகப் போர் ஒன்று ஏற்பட்டால் உலகம் என்ற ஒன்றே இருக்காது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் பல நாடுகள் பேரழிவு ஆயுதங்களை தம்வசம் வைத்திருப்பதேயாகும்.

முரண்பட்ட இரு குழுக்களுக்கிடையில் அல்லது இரு நாடுகளுக்கிடையில் ஏற்படுகின்ற மோதல் போர் எனப்படும். உக்ரேனும், ரஷ்யாவும் தம்மிடையே ஏற்பட்ட பிரச்சனையை, பிணக்கை, முரண்பாட்டை, கோபத்தை பேசித்தீர்க்க முடியாமையினால் இரண்டு வருடங்களுக்கு மேலாக போர் செய்து

கொண்டிருக்கின்றன. இதனால் இரண்டு நாடுகளிலும் ஆயிரக்கணக்கான போர் வீரர்களும், பொது மக்களும் உயிரிழந்துள்ளனர். காயமடைந்தவர்களின் தொகையோ ஏராளம் ஏராளம். அத்துடன் குண்டு வீச்சின் காரணமாக வீடுகளும் கட்டடங்களும் தரைமட்டமாகியுள்ளன. இப் போர், சம்பந்தப்பட்ட இரு நாடுகளில் மட்டுமன்றி உலகின் பல நாடுகளிலும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. சிறிய நாடான உக்ரேன் தானியங்கள், சமையல் எண்ணை, பெட்ரோல், டீசல் போன்ற எரி பொருட்கள் என்பவற்றை உற்பத்தி செய்து வருகின்றது. போரின் காரணமாக இப்பொருட்களின் உற்பத்தியும் ஏற்றுமதியும் பாதிப்படைந்துள்ளது. இதனால் உலக சந்தையில் மேற்படி பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. அவுஸ்திரேலியாவின் பொருளாதாரமும் இதன் காரணமாக பாதிப்புக்குள்ளாகியது. அவுஸ்திரேலியாவில் எரி பொருட்களின் விலை உயர்ந்தது. அதனால் எல்லா பொருட்களின் விலைகளும் உயர்வடைந்தது.

உலகத்தில் நிரந்தர அமைதியையும், சமாதானத்தையும் நிலைநிறுத்துவதற்காக 1945 ஆண்டில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையால் இப்போரை நிறுத்த முடியவில்லை. இந்த போரினால் மத்திய கிழக்கில் இன்னொரு போர் ஏற்பட்டுள்ளது. இது இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்தில் உள்ள ஆயுத குழுவான ஹமாசுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலாகும். இது நடந்து கொண்டிருக்கின்ற போது இஸ்ரேலும், ஈரானும் ஒன்றன் மீது ஒன்று ஏவுகணைகளை வீசியுள்ளன.

நாடுகள் தமக்கிடையே ஏற்படுகின்ற பிரச்சனைகளை பேச்சுவார்த்தை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு ஆகிய வழிகளில் தீர்த்துக் கொள்ள வேண்டும். அணுக்குண்டுகள் இரசாயனக் குண்டுகள், கொத்துக் குண்டுகள் போன்ற பேரழிவு ஆயுதங்களின் உற்பத்தியும், விற்பனையும் நிறுத்தப்பட வேண்டும். உலகத்தில் வாழ்கின்ற எல்லா நாடுகளின் மக்களும் அச்சமற்ற, நிம்மதியும், மகிழ்ச்சியும் நிலைத்த வாழ்க்கை வாழ்வதை அனைத்து நாடுகளும் உறுதிப்படுத்த வேண்டும்.

1. உலகத்தில், சாந்தி, சமாதானம் நிலைக்க என்ன செய்ய வேண்டும்? (2 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. போர் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

3. அவுஸ்திரேலியாவில் ஒவ்வொரு வருடமும் 25 ஆம் தேதி ஏப்ரல் மாதம் அன்சாக் (ANZAC DAY) தினம் அனுட்டிக்கப்படுகின்றது. இத்தினம் முதலாம் உலகப்போருடன் தொடர்புடையது. இதுபற்றி நீங்கள் அறிந்தவற்றை சுருக்கமாக எழுதுக. (3 புள்ளிகள்)

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

4. உக்ரேன் – ரஷ்ய யுத்தம் அவுஸ்திரேலியாவில் ஏற்படுத்திய பாதிப்புக்கள் எவை? (3 புள்ளிகள்)

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

**5. அட்டவணையிலுள்ள இடை வெளிகளை நிரப்புக. (5 புள்ளிகள்)**

| | |
|---|---|
| வல்லரசு நாடுகள் | |
| பேரழிவு ஆயுதங்கள் | |
| முதலாம் உலகப்போர் நடைபெற்ற காலம் | |
| இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலம் | |
| தற்போது நடைபெறுகின்ற போர்கள். | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **3** | **புள்ளிகள்** | **15** | **பக்கம்** | **8** |

**தரப்பட்டப் பந்தியை 70 சொற்களுக்கு குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்யுங்கள்.**

அன்று ஞாயிற்றுக்கிழமை எங்களுக்கு தேவையான உடுப்புகளை வாங்குவதற்காக பேர்வூட்டில் உள்ள வெஸ்ட்பீட் கடைத்தொகுதிக்கு நானும் அப்பாவும் அம்மாவும் தங்கையும் சென்றோம். நாங்கள் தரை மட்டத்தில் உள்ள கடைகளுக்கு சென்ற போது நடுவில் அமைக்கப்பட்ட சுழலுகின்ற மேடையில் ஜேர்மனில் தயாரிக்கப்பட்ட அழகான பென்ஸ் மகிழுந்து சுழன்று கொண்டிருந்தது. வீதியில் ஓட வேண்டிய மகிழுந்து மேடையில் சுழல்வதை பலர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். நாங்களும் அக்காட்சியை வியப்புடன் பார்த்தோம். பத்து டொலர்களை நீங்கள் செலுத்துவதன் மூலம் நூறாயிரம் டொலர்கள் பெறுமதியான இந்த மகிழுந்தின் உரிமையாளராக முடியும். எனவே 10 டொலர்களுக்கு அதிஷ்டச் சீட்டுகளை வாங்குங்கள் இதன் மூலம் கிடைக்கின்ற பணம் வெஸ்மீட் சிறுவர் வைத்திய சாலைக்கு அன்பளிப்பு செய்யப்படும் என்று ஒருவர் ஒலிவாங்கியில் அறிவிப்பு செய்து கொண்டிருந்தார். அப்பா எங்களுடைய அதிஷ்டத்தைப் பரிசோதித்துப் பார்க்கலாம். அத்துடன் சிறுவர் வைத்தியசாலைக்கு சிறிய பங்களிப்பை செய்யலாம். நாங்களும் ஒரு அதிஷ்டச் சீட்டை வாங்குவோமா? என்று அப்பாவிடம் கேட்டேன். அப்பா பணப் பையில் இருந்து பத்து டொலர் நோட்டை எடுத்து என்னிடம் நீட்டினார். நான் அதை மகிழ்ச்சியுடன் பெற்று ஒரு அதிஷ்டச் சீட்டை வாங்கினேன். பின்பு நாங்கள் கடைகளைக்குச் சென்று உடுப்புகளை வாங்கினோம்.

மக்டொனால்சில் மதிய உணவை அருந்தினோம். மகிழுந்து இருந்த இடத்திற்கு சென்றபோது அதிஷ்டச் சீட்டுக்களைக் குலுக்கப் போவதாக அறிவித்தார்கள். எல்லோரும் தாங்கள் வாங்கிய அதிஷ்டச் சீட்டுகளை கையில் வைத்துக் கொண்டு இருந்தார்கள். நானும் அவ்வாறே செய்தேன். என்னுடைய சீட்டிலிருந்த இலக்கம் பரிசு பெற்ற இலக்கமாக அறிவிக்கப்பட்டது. நாங்கள் அளவற்ற மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தோம்.

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

பின்வரும் 15 தனி வாக்கியங்களையும் ஒரே வினைமுற்றில் முடியக்கூடிய தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுங்கள்

1. ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு கலை விழா நாள் வந்தது.
2. யேம்ஸ்றூஸ் பாடசாலை மண்டபத்தின் வாசலில் அழகான கோலம் போடப்பட்டிருந்தது.
3. ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களும் பிற்பகல் 2.30 மணிக்கு வருகை தந்தனர்.
4. முன்னாள் ஆசிரியை மங்கல விளக்கேற்றி நிகழ்சியை ஆரம்பித்து வைத்தார்.
5. பாடல் குழு மாணவர்கள் தமிழ்மொழி வாழ்த்து, கல்வி நிலைய கீதம், தேசிய கீதம் என்பவற்றைப் பாடினார்கள்.
6. பன்னிரண்டாம் வகுப்பு மாணவர் வரவேற்புரையை நிகழ்த்தினார்.
7. முன்பள்ளி மாணவர்கள் பாடலுக்கு அழகாக அபிநயம் செய்தார்கள்.
8. தொடர்ந்து கீழ் வகுப்பு மாணவர்களின் நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்றன.
9. அதிபர், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் ஆகியோர் உரையாற்றினர்.
10. பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது.
11. நீண்ட சேவை செய்த ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.
12. 20 நிமிடங்கள் இடைவேளை விடப்பட்டது.
13. மதுரையில் பறந்த மீன் கொடி என்னும் வரலாற்று நாடகம் மேடையேறியது.
14. சபையினர் கரகோசம் செய்து பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.
15. இரவு 8:00 மணி க்கு கலை விழா இனிதே நிறைவடைந்தது.

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **5** | **புள்ளிகள்** | **20** | **பக்கம்** | **11** |

நீங்கள் வாழ்கின்ற நகரத்தில் பல்வேறு வசதிகளுடன் கூடிய ஒரு விளையாட்டு அரங்கை(stadium) நிர்மாணித்துத் தருமாறு நி.ச.வே மாநில விளையாட்டு அமைச்சருக்கு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுங்கள்.

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **6** | **புள்ளிகள்** | **20** | **பக்கம்** | **12** |

பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுங்கள்.

1. அன்னையர் தினம்.
2. எனது வெளிநாட்டுப் பயணம்.
3. மனதைக் கவரும் மலர்கள்.

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________